321 The Registrar of Books,
Madras 6.

321
4·57.

M. 5720 …NOV 951 …MADRAS

பதிவு எண் — M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—ரு | குருகுலம், மாம்பாக்கம் ; கர, ஆடி ; … சஉ

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

இரக்க உணர்ச்சி

ஏழை மக்கள், தம் வாழ்க்கையில் அடையும் இன்னல்கள் கணக்கிலடங்கா. அவ் வின்னல்களைக் கடவுளும் [illegible] தவிர்த்துக் காக்க இயலாத நான் ஏன் மனிதனாகப் பிறந்தேன்?

தங்குதற்குக் குடிசையும் அற்ற ஏழைகளே! இப் பாழுலகம் உங்களைப் பல்லாற்றானும் இகழ்ந்து பேசுதல் தவிர உங்கள் துன்ப நிலையைப் போக்க ஒருகாலும் முன்வரப் போவதில்லை. செல்வ மிகுந்த மக்களுடைய சிறிய தொல்லைகளைக் குறித்தும், மிகச் சாதாரணமான உடல் நலிவுகள் குறித்தும் உள்ளதைக் காட்டினும் பல மடங்கு பெருக்கிக் காட்டிச் சொல் வன்மை தோன்றுமாறு விரித்துப் பேசப்படுகிறது. கேட்போர் நெஞ்சம், அப் பேச்சினிமையில் மயங்கி, அச் செல்வர் நிலையை உண்மை யென்று கருதி வருத்தமும் அடைகிறது. ஏழைகள் தம் வாழ்நாள் முழுதும் கண்ணீர் பெருக்குகின்றார்கள். கவனிப்பாரில்லை! பல வழிகளாலும் துன்புறுத்தப்படுகிறார்கள். மேனிலையில் வாழும் மற்றவர்க்குப் பாதுகாப்பும் உறுதியும் அளிக்கும் நாட்டுச் சட்டங்களும் பிறவும் அவர்கட்கு மட்டும் பகையாய் முடிகின்றன. ஏன் என் உள்ளத்தில் இத்தகைய உணர்ச்சிகள் இடம் பெறுகின்றன? அல்லது, ஏன் என் செல்வ நிலை என் உணர்ச்சிக்குப் பயன் பெறத்தக்க நிலையில் அமையவில்லை? பிறர் துன்பத்தைப் போக்க இயலாதவனுடைய இரக்க உணர்ச்சி, தான் துன்பம் துடைக்க எண்ணும் அல்லது தன்னிடம் உதவி எதிர்பார்க்கும் மக்களின் நிலையைக் காட்டினும் தன்னைத் தாழ்வடையச் செய்கிறது.

(சி. து. க.) —Oliver Gold Smith.

யாத்திரை

[சைவப் பாதிரியார் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் 7-7-51ல் நிகழ்ந்த திருமுறை விழாவிற்குத் தலைமை தாங்கி ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.]

நாம் பலவகையில் பேசுகின்றோம். பேச்சின் பயனை நடத்தையில் காணுதல் வேண்டும். நாம் மிக நாகரிகமான வாழ்க்கை நடத்தி வருவதாக நினைக்கின்றோம். அதில் கடமையுணர்ச்சி இருப்பது குறைவு. இதனாலேயே நம்மைப்பற்றித் "தென்னாட்டவர் வெறும் வாய் வீரர்" என்னும் இழிந்த கருத்து பிற நாட்டவரிடம் நிலவுகின்றது. வாய் வீரர் என்னும் ஏசுதல் ஒழிய வெறும் அறிவு நீங்கி உண்மைத் யறிவு பெற்று ஆண்மையாளராய்த் தியாக வுணர்ச்சி உருப் பெற்று, சற்கரும வீரராய் விளங்க வேண்டும். மாளிகை தீப் பிடித்த காலை அதன்கண் ணுள்ள சித்திரத்தின்பால் இரசனை எழாதவாறு போல நம் சமுதாயத்திற்கு இது காலைநேர்ந் துள்ளபேராபத்தை நீக்கத் தீவிரப்படுவதை யொழித்துப் பண்டைப் பெருமைகளையும் சிறப்புகளையும் பேசி வாளாவிருப்பது தகாது.

நாம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியது யாது, செய்ய வேண்டுவன யாவை, தவிர வேண்டுவன யாவை, தவிர்க்க வேண்டுவன இன்னின்ன என்பதை உன்னி, சங்க காலப் பண்பு மிகுத்து வாழவேண்டும். அப் பண்புடைமையை மிகுத்துக் கொள்ளச் சாந்தம், ஒழுக்கமுடைமை, அருளுடைமை ஆகிய கட்டுத் திட்டங்கள் வகுத்து அவற்றிற்குப் பணிதலாகிய பண்பு வேண்டும்.

நாம் காணும் அண்டங்கள் சில. காணாதன பல. அவை கடற்கரையின் கண் ணுள்ள மணலையொத்த எண்ணுடையன. இவ் வுலகங்களுள் நாம் வாழும் உலகு ஒன்று. இதனுள் நம் மதிப்பு 280 கோடியில் ஒன்று. இதுவும் மனித வர்க்கத்தை ஒட்டியதே. இதைத் தவிர்த்து எண்ணிறந்த உயிர்கள் உள. இவற்றை யுன்னும்போது நம் சிறுமை தெரியும். எல்லாப் பிறப்பினும் மேலாம் மனிதப்பிறவி நமக்கு வாய்த்துள்ளது. இதை நன்கு மதித்திடல் வேண்டும். போற்றிப் பயன் கொள்ளல் வேண்டும்.

யாத்திரை போன்றது நம் வாழ்க்கை. இவ் யாத்திரை அவ புரத்தினின்று சிவ புரம் சேர்வதாகும். இவ் வுலக வாழ்க்கை சத்திர வாழ்க்கையை யொத்தது. உடம்பாகிய சிறு சத்திரத்தினுள் வாழும் வாழ்வு நிலையற்றது. இதை மறந்து சிறு பொருட்கெல்லாம் சினந்து திரிவது அறிவுடைமை யாகாது. இந்த யாத்திரை நினைவு மறந்து வெறும் அலங்கார, உண்மையைக் கூறுமிடத்து அலங்கோல வாழ்வு நடத்துகிறோம். இத்தகைய உண்மை இற்றைய சிறார் மனதில் பதிவதில்லை. அதனால் அவர் நம் பண்டைய சான்றோரைப் பத்தாம் பசலி எனக் குழறுகின்றனர்.

இது இப்படியிருக்க அவர்கள் போற்றி வணங்கும் மேனாட்டுச் சிலர் "உலகம் தோன்ற ஒரு காரணம் உண்டு. அது ஒரு நோக்கம் கொண்டு படைத்து நடத்தப்படுகிறது" என்று தாம் கண்டு பிடித்ததாக நவில்கின்றனர். இதை யொத்து ஹார்க்கிரீஸ் என்றவான் புலவன் தன் நூலின் இறுதி வாக்கியமாக "இவ் வுலகு எந்த நோக்கத்தோடு படைக்கப்பட்டிருக்குமோ" என்ற ஐயப்பாடு குறித்துள்ளான்.

நம் வாழ்வு மூவடுக்குடையது. அது இம்மை வாழ்வு, அம்மை வாழ்வு, வீட்டு வாழ்வு என்னும் முப் பகுப்புடையது. முதலாம் இம்மை வாழ்வாவது மேற் சட்டை போர்த்ததை யொத்த இவ் வுலக வாழ்வு; அம்மை வாழ்வாவது மரணத்தின் பின் வாழும் வாழ்வு; வீட்டு வாழ்வு பேரின்ப வாழ்வு. மரணம் என்பது தூல நீக்கத்தைக் குறிக்க வந்ததொன்று. கோட்டைக் கழற்றி மாட்டியில் இடுவதை யொத்தது. இத் தூல வாழ்வு போலி வாழ்வு. இன்ப துன்பம் விரவி வருவ[illegible] நல்ல பயனைப் பெற வேண்டுமாயின் நன்னினைவு வேண்டும். அந் நினைவுடன் செயலாற்ற வேண்டும்.

'செத்தாலும் சனியன் விடுவதில்லை' என்னும் வழக்குப் போல் நம் வினைப்பயன் தொடர்ந்துவரும். மேனாட்டவரும் மரணத்தின் பின் மனிதன் வாழ்கிறான் என்பதை ஒப்புக் கொள்ளுகின்றனர். தோன்றும் காரிய உலகுக்குத் தோன்றாத கர்த்தா ஒருவர் உண்டென்பதில் மனத் திடமாற்றம் வற்படுகின்றது. முறை தவறிய இவ் வாழ்வு வையத்துள் வாழ்வாங்கு வாழாத வாழ்வு; குறிக்கோளில்லாத வாழ்வு எனலாம்.

உடம்பிற்கும் உயிருக்கும் பிணிப்பு உயர்ந்து ஆண்டவனோடு ஒன்றுபடுதலாகிய வீட்டுப் பெருநிலைக் குரிய காலம் குறுகி யமைந்துள்ளது. அஞ்ஞான மறைப்பால் மருண்டு அதைப் பெருக வைத்துக் கொள்ளுகிறோம். அம் மறைப்பால் உண்மை நெறியையும் மற நெறியாகக் காண்கின்ற காலம் இது.

சினிமா நாகரிகம் பெருகிய இக் காலத்தில் நாம் இன்று காணும் திருமுறை நாகரிகம் திருமறை நாகரிகம் ஆகும் இதுவே அழியாத பெருமை தரும் தெய்விக ஆத்மிக நாகரிகம்; மண்ணை உள்ளபடி மதித்துச் சிற்றின்ப நாட்ட மொழித்து உடம்பினை உண்மையாக ஓம்பும் உண்மை நாகரிகம். மருள் நீங்க அருளிற் சிறந்த பெரியோர் கூட்டுறவு வேண்டும்; அப்போது நாட்டுப் பண்பு உயரும். நம் சைவத் திருமுறைகள் பன்னிரண்டு; அவை திருமுறை; மேன்மை பொருந்திய ஞானத்தை முறைப்படுத்தித் தருகின்ற நூல்கள் ஆகும். நம் நல்வினைப் பயனால் இத் திருமுறைகள் தமிழில் உள்ளன. வேதம் என்பது அறிவு. அது சிறந்த அறிவு; மலைக்கு ஒப்பானது. இதனாலேயே ஆண்டவன் மலையின் உச்சியினுள்ளார் என்கின்றனர். மலை எவ்வாறு

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

நற்றிணை 'அழகு'

[அளவை இலக்கணத்தில் ஒரு பாடம்]

[R. G. பிள்ளை B., A.,]

மலை நாட்டுத் தலைமகன், இயற்கைப் புணர்ச்சிக்குப் பின், தலைமகளை நாடிப் பன்முறை வந்தான். அவன் அவ்வாறு வருவதைக் கண்ட தோழி, 'அம்மலை கிழவோன் நம்மை விரும்பி என்றும் வருந்துகின்றான்' என்று தலைவிக்குக் கூறித் தலைவன் றன் குறையை அறிவுறுத்தினாள். தன் வாய்ச்சொல்லிற்குத் தலைமகள் இலேசில் இணங்காமையால், தோழி அவளை இடித்துக் கூறுகிறாள். தோழியின் கூற்றைப் பின்வரும் நற்றிணைச் செய்யுள் விளக்குகின்றது :—

"மாயோ னன்ன மால்வரைக்
கவாஅன்
வாலியோ னன்ன வயங்கு
வெள்ளருவி
யம்மலை கிழவோ னந்நயந்
தென்றும்
வருந்தின னென்பதோர்
வாய்ச்சொற் றேறாய்
நீரிங் கண்டு நுமரொடு மெண்ணி
யறிவறிந் தளவல் வேண்டு
மறுதாற்
கரிய வாழி தோழி பெரியோர்
நாடி நட்பி னல்லது
நட்டு நாடார்தம் மொட்டியோர்
திறத்தே."

இச் செய்யுளைப் பாடிய கபிலர், கடைச் சங்கப் புலவர்களில் ஒருவர்; அவர் தம் காலத்துப் பெரும் புலவர்களால் பெரிதும் பாராட்டப் பெற்றவர். வாய்மொழியில் வல்லவரானமையால், அவரை நக்கீரர் 'வாய்மொழிக் கபிலன்' என்று அகநானூற்றில் பாராட்டியுள்ளார். 'கபிலர் அகவல்' என்னும் நூலைப் பாடியவரும், இச் செய்யுளாசிரியரே யெனின், அவரை, அவர் காலத்துப் புரட்சிக் கவி என்றுங் கூறலாம். மேற்காட்டிய நற்றிணைச் செய்யுளினின்றும் கபிலருடைய வாய்மொழியை ஈண்டுச் சிறிது காண்போம்.

பெரிய மலை ஒன்றன் பக்கத்தில் வெள்ளருவி ஒன்று ஓடுகிறது. கபிலர் அம் மலைக்கு மாயோனை உவமை கூறினார். காண்போரை மலைவுறச் (மருளச்) செய்வது மலையாயிற்று. மாயோன் றன் மாயமும் மருட்கையையுடையது. 'திரண்டமரர் தொழுதேத்துந் திருமால்........... மாயமோ மருட்கைத்தே' என்றார் இளங்கோவடிகள். எனவே, திருமாலின் நெடுமை நோக்கி ஆசிரியர் அவரை மலைக்கு உவமை யாக்கினார் என்பதினும் அவர் தம் மாயத்தைக் குறித்தே 'மாயோனன்ன மால்வரை' என்றாரென்கை சாலப் பொருந்தும்.

மலைக்குத் திருமாலை உவமை கூறிய கபிலர் அம் மலைப் பக்கத்தில் ஓடுகின்ற நீரருவியின் வெண்மை நோக்கி, 'வாலியோ னன்ன வயங்கு வெள்ளருவி' என்றார். மால்வரைக்கும் நீரருவிக்குமுள்ள அண்மை கருதி, கண்ணனுடைய அண்ணனாகிய பலதேவனை நீரருவிக்கு உவமை யாக்கினார் இரு பொருள்கள் பெரிதும் ஒத்து சிறிது ஒவ்வாமையே 'போல' என்பதன் பொருள் என்று நக்கீரர் இறையனாரகப் பொருளுரையில் கூறினார். மலைக்கும் அருவிக்கும் கபிலர் இங்குக் கூறிய உவமைகள் நக்கீரர் விளக்கிய போலித் தன்மையை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன வன்றோ?

தலைமகனை ஆசிரியர் 'அம் மலை கிழவோன்' எனக் குறித்தார். குன்றுதோறாடுகின்ற குமரனைப் 'பழமுதிர் சோலைமலை கிழவோன்' என்றார் நக்கீரர் தாமியற்றிய திருமுருகாற்றுப் படையில். குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகனை வேறு படுத்திக் காட்ட வேண்டி, கபிலர், தலைவன் குறித்த மலைக்கு உரியவன் என்பது தோன்ற, 'அ' என்னுஞ் சுட்டால் அம் மலை கிழவோன் என்றார். 'அம்மலை கிழவோனே' என்ற திருமுருகாற்றுப் படை அடிகளால் அருவியோடுகின்ற மலைப் பக்கத்தின் இனிமையும் அழகும் இனிது விளங்கும்.

"அம்மலை நாட்டிற்குரிய தலைவன் நாள்தோறும் நம் புனத்தயலில் வந்து, நம்மை விரும்பி, வருந்துகின்றான். நான் கண்டறிந்த உண்மையை உன்னிடம் சொல்கின்றேன். நீயோ தெளிந்திலை. என் வாய்ச்சொல்லை நீ நம்பா விட்டால், நீயே அதனை ஆராய்ந்து உண்மையைக் காணலாம். ஆராய்வதெப்படி என்பாயாகில், நான் அதற்கு வழி சொல்லுகிறேன். உன்னைக் காண வருந்தி வந்த தலைவனை நீயே போய்ப் பார். அவனைக் கண்ட பின்னரும் நீ தெளியாவிடில், யான் தவிர, உன்மீது அன்புள்ள ஏனைய தோழியரோடும் எண்ணிப் பார். அதன் பின், அறிய வேண்டுவனவற்றை அறிந்து, அவனுடன் நீ அளவளாவுதல் வேண்டும்" என்று தலைவியை நோக்கிக் கூறிய தோழிக்கு ஒரு சந்தேகம் பிறந்தது. அதனைத் திரும்பவும் அவள் தலைவிக்கு அறிவுறுத்துகிறாள்.

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

கைத்தறி ஆடைகள்

வணிகக் குறி !

—N. K. M.—

தங்க நாடா

(பதிவு)

எண் 20 முதல் 100 வரையில்
வேட்டி, சேலை, துண்டு, போர்வை,
மேலாடை முதலியவை பல வகை
களிற் கிடைக்கும்.

நூலாடை கட்டும்
பட்டாடை கட்டும்

நம்பிக்கையான இடம் :

கருப்பண முதலியார்
ஸ்டோர்ஸ்,
துணி வாணிபம்,
53, கிடங்குத் தெரு, சென்னை 1.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.

கிளை	கர, ஆடி,	தளிர்
3	3-8-51 வெள்ளி	42

தகுதி யறிதல்

தகுதி யறிதல் என்பது, பிறருடைய நல்லொழுக்கம், புலத்துறை முற்றிய பொருள்சால் அறிவு, கல்விச் சிறப்பு, சொல்வன்மை முதலிய தகுதிகளைத் தம் அறிவுக் கண் கொண்டு ஆராய்ந்து மதித்தலாகும். இச்செயல் சிறிதளவு கல்வியினால் விளக்கம் பெற்ற அறிவினையுடைய மாந்தர்க்கு இயல்வதன்று. இயல்பிலேயே நல்லறிவு, கல்விச் செழுமை முதலிய நலன்கள் வாய்க்கப் பெற்ற பெருமக்களுக்கு இத் 'தகுதியுணர்வு' மிக எளிதில் கைகூடுவதாகும்.

மிகப்பழைய நாட்களில் இம் மதிப்பீட்டின் பெருமை நாட்டில் மிக முதன்மையாகக் கருதப்பட்டது. அரசர், புலவர்பெருமக்களின் தகுதிகளை நன்கு அறிந்து தமக்கும் நாட்டுக்கும் அத்தகுதி பயன் தரும் வகையில் அப்புலவர் பெருமக்களைக் காத்தோம்பினர். புலவர்களும் தம் தகுதியறிந்து புரந்த ஆட்சித் தலைவர்க்கு ஆய்வுரை நல்கும் உறுதுணையாளராய் ஒழுகி நின்றனர். மற்றும் அக்காலத்துப் புலவர் பெருமக்கள் தமக்குள் அறிவான் மேம்பட்ட புலவரின் தகுதியினை நன்குணர்ந்து பாராட்டத் தவறியதில்லை. பொய்ம்மைக்கு அடிமையாகாத அப் பழங்காலப் புலவர் தகுதியறிதலுக்கு எதிராக, அழுக்காறு முதலியன இடம் பெறவில்லை.

நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற அந்த ணாளன்
இரந்துசெல் மாக்கட் கினியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன்......

என்னும் புறநானூற்றுப் பாடல், கபிலர் பெருமான் அறிவின் தகுதி மற்றொரு புலவரால் பெரிதும் பாராட்டப் பெற்றமையை விளக்குகின்றது.

சங்க காலத்தில் 'தகுதியுணர்வு' அறிஞர் இடையில் சிறந்து விளங்கியதற்குப் பல சான்றுகள் உள்ளன. நெடுஞ்செழியன் என்னும் வேந்தன் மாங்குடி மருதனார் போன்ற பெரும்புலவர் துணை கொண்டு அவர்தம் ஆய்வுரைகளின் அமைப்பிலேயே ஆட்சி நடத்தி விளங்கினான் என அறிகிறோம். பகை வேந்தர்க்கு 'உடன்று மேல்வரும் கூற்றென' அச்சம் தோற்றிய தமிழ் வேந்தர், புலவர் பெருமக்கட்கு இனிய தண்ணிலவு போலப் பழகுதற்கு இனியராக ஒழுகினர். கோவூர் கிழார் போன்ற புல்வர் தகுதியுணர்ந்த வேந்தர் அவர்தம் தலையீட்டால் நீக்கற்கரிய போர்ச் செயல்களும் நீங்கி ஒற்றுமையுடன் ஒழுகினர்.

இன்னும் இத் தகுதியுணர்வின் முதன்மையை அக்காலத்து வாழ்ந்த அறிஞர் அரசர்க்கு நினைவுறுத்திய வண்ணம் இருந்தனர்.

ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ அரிதே; பெரிதும்
ஈத லெளிதே; மாவண் டோன்றல்!
அதுநற் கறிந்தனை யாயின்,

பொதுநோக் கொழிமதி புலவர்மாட்டே என்னும் புறப்பாட்டு, வரிசையறியும் முதன்மையை வற்புறுத்தும் தன்மையை அறியலாம்.

நல்லறிஞர் உயிருடன் வாழும் காலத்திலேயே அவர் தகுதியறிந்த பெருமக்கள் அவர் நல்வாழ்வுக்குரிய உதவிகளைக் காலத்தாற் செய்து காத்தோம்புதல், தமக்குரிய பெருந்தொண்டாகக் கருதினர்.

முன்னேற்றம் விரைந்தெய்த விரும்பிய ஒவ்வொரு நாடும் இத் தகுதியுணர்வின் பெரும் பயனைத் தம் கடமை பிறழாத செயல்களால் பெற்று மகிழ்ந்து வருகின்றது.

ஆனால், நாம் இந்நாள் நம் நாட்டில் காண்பதென்ன! தகுதியறிதல் என்பது வாழ்க்கை முன்னேற்றத்துக்குத் தகுதியற்றது போலக் கருதப்பட்டு வருகின்றது. பெருஞ் செல்வர்களும் நல்லறிஞர்களும் இத்தகுதி யுணர்வின் முதன்மையை அறவே மறந்து வருகிறார்கள். நாடு சிறுகச் சிறுக அடைந்து வரும் தாழ்வுகள் யாவும் அம்மறப்பின் பயனால் உண்டாகின்றன என்பதை நம்மவர் இனியாவது நன்கு உணர்தல் வேண்டும். போலிப் புலமைக்கு இடந்தருதலும், தம் திரிபுணர்ச்சிக்கு ஏற்ப அளவில்லாத சிறப்பீதலும், நற்புலவரை ஏதோ தம் கருத்தில் உருவாகும் காரணங்களால் இகழ்வதும் தகுதியறியும் பண்பு குறைந்துள்ள நிலையில் உண்டாவதாகும். நற்புலவர் வாழு நாட்களில் அவர் உள்ளம் உவப்பன செய்து பெரும்பயன் பெறாது வறிதே காலங்கழித்து, அவர் பொய்

யுடல் உலகில் மறைந்த பின்னர், ஆ! அவர் வாழ்ந்த நாட்களில் இது செய்ய மறந்தோம், அது செய்யா தொழிந்தோம் என்று கவலுதலும், அவர் பெயராற் கழகங்கள் தோற்றுவித்தலும், நெஞ்சொடிந்த குடும்பத்துக்கு நிதி திரட்டித்தருதலும், நினைவின்றி வெறுத்தொதுக்கிய அப்புலவர்க்கு நினைவு மாளிகை புனைதலும் பிறவும் எற்றுக்கு என்று கருதுகின்றோம்.

எனவே, தகுதியறிந்து அறிஞர்களைக் காத்தோம்பி அவர் வாழ் நாட்களிலேயே அவர்க்காவன செய்து அவரால் தாமும் தாம் வாழும் நாடும் சிறப்பெய்த ஒவ்வொரு செல்வரும் நல்லறிஞரும் முன் வருதல், நாடிருக்கும் இந்நிலையில் மிகவும் வேண்டப்படுவதாகும்.

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

இப்போதும் நீ இவளை மணக்க விரும்புகிறாயா? மகனே! நீ இனிமேல் இவ் வீட்டில்தான் வாழ வேண்டும். எனக்கு மகன் வந்து விட்டான் என்று நான் மகிழ்ச்சியடைய வேண்டும். இந்த இன்னல் நேர்ந்தது எல்லாம் நான் சிறுவயதில் செய்த தவறுதல்தான்.

நான் பிறகு வருகின்றேன் என்று கூறிவிட்டு, பார்வதியின் கண்ணீர் நிறைந்த பார்வை ஒன்றை வீசிவிட்டு அவன் கண்ணீர் வடிப்பதையும் கவனியாமல், தனபால் 'அரசு' 'இங்குவா' என்று ஓலமிடுவதையும் உணராதவனாய் வேகமாகச் சென்று இருளில் மறைந்து விட்டான்.

குமாரசாமியின் வீட்டுக்கு உடனே காரை எடுத்துச்சென்று பார்த்தார். தனபால் அங்கும் அவனைக் காணவில்லை.

அடுத்த நாள் ஒரு நீண்ட கடிதம் வந்தது குமாரசாமிக்கு. அதில், தான் அவரிடம் கூறாமல் சென்று விட்டதற்கு மன்னிக்க வேண்டுமென்றும், தான் வெளியூருக்குச் சென்று வாழ விரும்பி வீட்டை விட்டு வெளியேறி விட்டதாகவும், தான் இனி எங்கு வசிப்பேன் என்பது தனக்கே நிலையாகத் தெரியாதென்றும், தற்போது தனக்குத் 'தந்தை' தனபால் என்று அறிந்ததால் அவருக்குத் தன் வணக்கத்தைத் தெரிவிக்கக் கூறியும், தன் 'கைவிடப்பட்ட தங்கைபார்வதி'க்குத் தேறுதல் கூறும்படியும், நண்பனுக்கு நண்பனாக, உடன் பிறந்தானுக்கு உடன் பிறந்தானாக சிறு வயது முதல் விளங்கிய மணிக்குத் தன் நன்றியையும் அறிவிக்குமாறும், தனக்கு தனபாலால் கொடுக்கப்பட விருந்த 'சொத்து' முழுவதும் மணிக்குச் சேர்ந்தால் தம் மனது சாந்தியடையுமென்றும் அதில் விரிவாக எழுதியிருந்தது.

அதைப் போல இலங்கைக்கும் வேலாயுதத்திற்கும் அவர் தம் மனைவி கனகத்திற்கும் நன்றியறில் கடிதம் எழுதியிருந்தான்.

வீட்டைவிட்டுக் கப்பலில் முதன் முதல் வேலை (Apprentice) செய்பவனாக அமர்ந்த அரசு, முடிவில் கப்பல் தளகர்த்தனாகப் பதவியில் சீக்கிரமே முன்னேறினான். கவலை கிடந்த அவன் காதல் முறிவு காலம் சில சமயங்களில் அவன் கவனத்திற்கு வரும். அப்போதெல்லாம் கண் கலங்குவான்.

வானமே இடிந்து வீழ்ந்தாலும் பார்வதி வேறு மணம் செய்து கொள்ளச் செப்பவில்லை. மறுபடியும் பத்தாவதில் சேர்ந்து படித்து வெற்றி பெற்று, வைத்தியத் தொழிலுக்குப் படித்து அதிலும் வெற்றி பெற்று, 'அமைதி' வாழ்வு, அதாவது வைத்தியத் தொழில் நடத்தி ஏழை எளியவர்களுக்கு உதவி செய்து கொண்டிருந்தாள். வெண்ணிலா ஒளியில் தானும் அரசும் கண்ட இன்பமான கனவு கடைசியில் கனியாத காயின் நிலைக்கு மாறியதை எண்ணிச் சில சமயம் கண்ணீருகுப்பாள்.

மணியும் மற்றவரும் அவ்வாறே அவனை நினைத்துக்கொண்டு சில சமயம் கண்ணீர் வடிப்பர்.

(முற்றும்.)

முருகவேள் திருமுறைகள்

முதல் பகுதி வெளிவந்தபின், மேலும் பெயர்ப் பதிவுகள் சேர்ந்து வருகின்றன. குறித்த அளவு சேர்ந்தபின், வெளியீடுகள் தொடர்ந்து வெளிவரும்.

இத் திருமுறைகள் பகுதி பகுதியாக வெளிவருதலை விட, தொகுதி தொகுதியாக அட்டைக் கட்டுச் செய்து வெளிவருதல் கையாளுதற்குத் தகுதியாயிருக்கும் என்றும், அஞ்சலில் வருவிப்பதற்கும் செலவு குறையும் என்றும் சிலர் கருத்து அறிவிக்கின்றனர். அவ்வாறே செய்ய வெளியிடுவோர் இசைந்துள்ளனர்.

நான்கு பகுதிகள் சேர்ந்த தொகுதி ஒன்று (400 பக்கங்கள்) ரூபா 5-0-0 விலையாகும். வாங்குவோர்க்குக் கட்டுச் செய்யும் தனிச் செலவு அப்போது இல்லை. நான்கு திங்களில் நடைபெறும் பணி, இரண்டு திங்களில் நிறைவேறும். பல வெளியீடுகள் இங்ஙனம் தொடர்ந்து விரைவில் வெளிவருதற்கும் வாய்ப்பாயிருக்கும்.

ஆதலால், முருகவேள் திருமுறை அன்பர்கள், தொகுதியாகவே இனிப்பெற்றுக்கொள்ளலாம். விரும்பும் அன்பர்கள் அதற்குரிய விலை ரூபா ஐந்தை முன்னால் அனுப்பி ஒவ்வொரு தொகுதியையும் பெற்றுக் கொள்வார்களாக!

வாங்குவோர் எண்ணிக்கை போதியது அமைந்தால் ஆவணித் திங்களிலேயே முதல் தொகுதியை வெளியிடலாகும்.

குறிப்பு :-முதல் பகுதியை வாங்கிக் கொண்டவர்கள், முதல் தொகுதியில் அடங்கும் ஏனை மூன்று பகுதிகளையும் தனித்தனியே பெற விரும்பினாலும் அவர்களுக்கு அவ்வாறே அனுப்பி வைக்கப்பெறும்.

—குருகுலத்தார்.

கனியாத காய்

[அ. தி. வீரராகவன்]

இலை உதிர்காலம். மரங்களிலிருந்த இலைகளெல்லாம் காற்றில் விழுந்து விட்டன. இலைகளும் பூக்களும், காய்களும் தழைத்திருந்த நிலை மாறி கிளைகள் மட்டும் உள்ள மரங்களாகக் காட்சி யளித்தன— சதை யில்லா எலும்பு மனிதன் போல.

ஓங்கி ஒரு காற்று வீசிற்று. தோட்டத்திலிருந்த மரங்களிலிருந்து ஒன்றிரண்டு இலைகள் அரசுவின் முகத்திலும் பார்வதியின் முகத்திலும் அடித்தன.

அப்பா அரசு இப்படி உட்கார். இன்றைக்குச் சற்றேறக்குறைய இருபத்தைந்து வருடங்களுக்கு முன் நான் சிதம்பரத்தில் வசித்துக் கொண்டிருந்தேன். அப்போது என் தாய் தந்தையர் உயிருடன் இருந்தார் நான் பள்ளி இறுதித் தேர்வு படித்துக் கொண்டிருந்தேன் அவ் வூரிலிருக்கும் பச்சையப்பன் பாடசாலையில். அரசு! நீ இப்போது எப்படி பார்வதியின் மேல் அன்பு கொண்டிருந்தாயோ அவ்வாறே நானும் 'பார்வதியின்' மேல் அன்பு கொண்டிருந்தேன். அவளும் அப்போது பத்தாவது படித்துக் கொண்டிருந்தாள். கள்ளங் கபடு இல்லா உள்ளம் படைத்தவள். பாவி; என்னை நம்பினாள். அப்போது நான் இருந்த நிலை அவளை அவ்வாறு வெளி நாட்டிற்கு அனுப்பத் தாண்டிற்று. நாங்கள் பழகுவது எங்கள் பெற்றோர்க்குத் தெரியாது. என் தந்தை பெரிய பணக்காரர் ஆனதால் நான் பணத்தைத் தாராளமாகவே செலவு செய்து வந்தேன். 'பள்ளிக்குச் செல்கிறோம் என்று பொய்கூறி அடிக்கடி பக்கத்தில் இருக்கும் பல ஊர்களுக்கு நாங்கள் உல்லாசமாகச் செல்வோம்! பல இடங்களில் நாங்கள் இருவரும் சேர்ந்தோ, அல்லது தனித் தனியாகவோ புகைப்படம் (Photo) எடுத்துக்கொள்வது வழக்கம். இயற்கை யன்னை கூடவா எங்கள் நட்பை மறைப்பாள். அவள் கருத்தரிக்கத் தலைப்பட்டாள். இதை என்னிடம் ஒரு நாள் இரகசியமாகச் சொன்னாள். அடுத்த நாள் அவளை என்னை நீ வந்து சந்திப்பாய் எனக் கூறினேன். வீட்டுக்குச் சென்ற என் உள்ளம் பல சிந்தனைகளினூடே சுழன்றது. அவளை மணந்து கொள்ளலா மென்றாலோ எங்கள் தகப்பனுக்கும் அவள் குடும்பத்திற்கும் தீராப் பகை. அன்று இரவு ஒரு உயில் என் கைப்பட எழுதினேன் அதில் கீழ்க் கண்டவாறு குறித்திருந்தேன்.

'உனக்குப் பிறந்தது மகனாயிருந்தால் இன்னும் இருபது வருடம் கழித்து, என் சொத்தில் பாதி யடையலாம். பெண்ணாயிருந்தால் ஒன்றும் கிடையாது. அதற்கு அடையாளம் என்னுடைய 'த' என்ற எழுத்துப் பொறித்த மோதிரம்'

அடுத்த நாள் இதை எடுத்துக் கொண்டு கையில் ஒரு ரூ. 500-யையும் எடுத்துக்கொண்டு, அவளுக்கு என் நிலையைக் கூறி, இலங்கைக்குக் கப்பல் ஏற்றி விட்டேன். கடைசியில் நாங்கள் கன்னியா குமரியில் புகைப்படம் எடுத்துக்கொண்டோம். அந்த இரண்டில் ஒன்றை என்னுடைய உயிலுடன் சேர்த்து அதில் என்னுடைய கையெழுத்தும் இட்டுக் கொடுத்தேன்.

அவளுடைய படந்தான் இங்குப் பெரியதாகத் தாழ்வாரத்தில் மாட்டியிருக்கிறேன். பிறகுதான் நான் மங்கையர்க்கரசியை மணந்து கொண்டது. அந்தப் பார்வதியின் சகோதான்தான் தற்போது உன்னை வளர்க்கும் குமாரசாமி. நீ அந்தப் பார்வதிக்குப் பிறந்தவன்தான். என் மகன் தான். இதெல்லாம் உனக்குக் கனவு போல் தோன்றும்; அல்லது பொய்போல் இருக்கும். நான் கொடுத்த அந்த மோதிரத்தையும், உயிலையும் நேற்றுக் குமாரசாமி என்னிடம் நேரில் [illegible] விருந்து தான், நீ என் [illegible] நிச்சயமாகத் தெரிந்தது. அப்போது வேலாயுதம் யாரென்று நீ கேட்கலாம். ஒரு நாள் அவர் வைத்திய சாலையில் ஒருத்தி, தெருவில் மயங்கிய நிலையில் விழுந்து கிடந்தாள் என்று சேர்க்க, அவள் அங்கு ஒரு மகனைப் பெற்றெடுக்க, உடனே உயிர் போகும் தருவாயில் அவள் இருக்க, அச் சமயம் அம் மோதிரத்தையும், உயிலையும், அதன் இரகசியத்தையும் வைத்தியரிடம் கூறி விண்ணுலகுக்கு அவள் விடைபெற்றுக்கொண்டாளாம். அன்றிலிருந்து உன்னை வேலாயுதம் வளர்க்கிறாராம். ஐந்து நாளைக்கு முன் இங்கு வந்தபோது அவைகளைக் கையோடு எடுத்துவந்து குமாரசாமியிடம் கொடுத்துவிட்டுச் சென்றாராம். அவர் அவைகளை என்னிடம் நேற்றுத்தான் காண்பித்தார்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

நஞ்சன்கூடு பல்பொடி.
பாக்டெரியாரின்
நம்பிக்கை பெற்ற
ஆயுர்வேத உதவிகள்

காஸ்மஸ்
கஸ்தூரி மாத்திரை
கர்ஜன்
கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ்
பேதியாக மாத்திரை
சிசுராக் குழந்தை டானிக்
பிமலெக்ஸ் டானிக்
யூடிருல்
கர்பிணிகளுக்கு
டோனடெல்
பிரஸவமானபின் டானிக்
ஹிஸ்மெனே டானிக்

பிரதமென்ஸ்
சூதக கோளாருகளுக்கு
யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1.

[2-ம் பக்கம் தொடர்ச்சி]

தோற்றத்தால் உயர்ந்து எங்கும் தெரிவதாகின்றதோ அவ்வாறே அறிவும் பரந்து உயர்ந்தது. அறிவின் சிகரம் ஆண்டவன் என்றாலும், வேத அறிவால் அதாவது நூலறிவால் அவனை அறியவொண்ணாது. ஆண்டவனை அடைதற்கு வேதம் ஒரு கருவி போன்றது.

தேள் கடித் துயரம் போக்க மட்டும் மந்திரம் தெரிந்து வைத்துக் கொள்ளுகிறோம். விதண்டித்துப் பேசுபவர்களை மாற்றித் திருத்தவோ திருந்தத் தவறினால் மந்திரத்தால் அடக்கவோ ஆற்றல் கைவந்த விசுவாமித்திரரைப் போன்ற தவசிகள் இப்போது இல்லை. தவப் பண்பு குறைந்து வருகிற காலம் இது. இதைவிட மிக இருண்ட தொரு காலத்தைச் சரித்திரம் கண்டுள்ளது. 3 முதல் 5-ம் நூற்றாண்டு வரை நிலை தடுமாறி மக்கள் விபரீத உணர்வு உடையராய் இருந்தனர். இயற்கைக்கு மாறான எண்ணமுடையராய் இருந்தனர். 'உலகம் பொல்லாதது; பெண் பாபம்' என்று வாய் வேதாந்தம் பேசிச் செயலில் பொறியின்ப ஒழுக்கத்திலேயே தலைப்பட்டிருந்தனர். அக் காலத்தில் மதுரை மீனாட்சி யம்மன் கோயிலுக்கு ஒரு நாளில் இருவரே சென்று வழிபட்டனர் என்ற குறிப்பு இருக்கிறது. இத்தகைய மரணத் தருவாயிலிருந்து புத்தர் மக்களை மீட்டார்; சமண முனிவர் இதற்குஅனுகூலமா யிருந்தனர். இந்த உண்மை மீண்டும் நிகழ வேண்டிய காலம் இது. காந்தி போன்ற சான்றோர் பலர் தோன்ற வேண்டிய காலம் இது.

உலகத்தில் எப்போதும் துன்பத்தின் தூண்டுதல் உண்டு. கல்வி அறிவை விளங்கச் செய்கின்றது. கலை யறிவும் சமய அறிவும் மன மாசுகள் நீங்கத் துணை செய்ய வல்லன. திருமுறைகளை தினமும் ஓதி வருதல் வேண்டும். கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் ஓர் ஆண்டுதனில், பன்னிரு திருமுறைகளையும் ஓதி முடித்தலைத் தம் வாழ்நாளில் மேற்கொண்டு ஒழுகி வந்தார். சாப்பிடுவதற்கு நேரமில்லை என்று எவரும் அதை இதுவரை நீக்கிவைத்தாரில்லை. எனவே இயன்ற மட்டும் திருமுறைத் திரட்டு போன்ற நூல்களையாகிலும் குறுகிய அளவில் பாராயணம் செய்து முறை தவறாது ஓதும் கடைப்பிடி உயிர்க்கு உறுதி பயத்தலின் சைவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் தவறாமல் அதை மேற்கொள்ளல் வேண்டும். காலையில் எழுந்ததும் காபியின் நினைவு ஓங்கிய பின் கடவுளின் நினைவு வந்தாலும் வரும், வாராமற் போனாலும் போம். மேலும் அது இயற்கையை யொட்டி வருவதில்லை. அஞ்ஞானம் நிறைந்த உலகத்தில் வி(ஞ்)ஞானம் தான் பெருகியுள்ளது. அவ் வி(ஞ்)ஞான வளர்ச்சியும் ஓர் அளவோடு இருந்தால் தான் தன் முழுப் பயனையும் தரும். பொருளை யறியும் அறிவால் உண்மை அறிவழிந்து மதி மயங்கி, அலமந்து உயிர் போகும் தருணம் உற்றவர் யார்? அச் சாநாளை யறிவார் யார்! "நீ நாளும் நினை நெஞ்சே சாநாளும் வாழ்நாளும் யாரறிவார்" என்னும் அருள் வாக்கில் 'நீ அச் சாநாளை தினமும் எண்ணுவாய், எண்ணி நாளும் நெஞ்சத்தை மாசகல என்ன செய்தாய் என்று கேள் என்பது பிறக்கின்றதல்லவா! இந்த தற்சோதனையை ஒவ்வொருவரும் படுக்கைக்குச் செல்லுமுன் செய்து கொள்ளல் வேண்டும். தவறு நடந்த காலை அதற்கஞ்சி இறைவனின் மன்னிப்பைப் பெற முயலவேண்டும். தலையண்டை திரு நீறு இருத்தல் வேண்டும். இதுதான் கண் வாழ்க்கை அல்லது ஞான வாழ்க்கை. மரண நினைப்பு புனிதப்படுத்திக் கொள்ளும் வகையில் இருத்திக்கொள்ள வேண்டும். ஐம் பெருங் குற்றங்கள் வளரும் இக் காலத்தில் வாழ்க்கையை நன் முறைப்படுத்திக் கொள்ளத் திருமுறையைப் போற்றுதல் வேண்டும். இப் போற்றுதல் புதிதன்று. தொன்று தொட்டு சரித்திர வழக்காய் வருவது, இம்மை, அம்மை வாழ்விற்குப் பெரும் பயனளிக்க வல்லது. உலகுய்ய, பிணிகள் நீங்க திருமுறை ஓதுதல், திருநாமம் படித்தல், பிரார்த்தனை செய்தல் வேண்டும். இவற்றைத் தனித்தும் சேர்ந்தும் இயன்ற மட்டும் தவறாது செய்தல் வேண்டும். இச் சிறப்பில் முகம்மதியர்கள் கொண்டு ஒழுகும் முறையை நம்மவர்களும் கைக் கொள்ளல் வேண்டும். அவர் (1) தினமும் ஐந்து முறை ஆண்டவனை எங்கிருந்த போதிலும் தவறாது நினைந்து வணங்குதல்; (2) தம் ஆயுளில் மெக்கா யாத்திரை மேற் கொள்ளுதலை விரும்பி முயலுதல்; (3) தம் சமுதாய வளர்ச்சிக்கு வருவாயில் 100-க்கு $2\frac{1}{4}$ பங்கு ஒதுக்கிவைத்துச் சேவை செய்தலாகிய கோட்பாடு உடையவர்.

நஞ்சமயம் வெறும் ஆள் பலத்தால் முன்னேற முடியாது. ஒற்றுமை வேண்டும். சமயத்திற்கு ஆணி போன்ற ஒரு மத்திய சபை வேண்டும். அச் சபைக்கு அங்கத்தினர்களை வேறுபாடு தவிர்த்து எல்லோரையும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். ஆண்டுக்கு நான்கணா போன்ற குறைந்த அளவில் கையொப்பம் அவர்களே தளராது விரும்பிக் கொடுக்குமாறு முறை செய்து கொள்ளல் வேண்டும். "வெம்மின் உம் மன்போடு எம் மன்பு செய்மின்" என்ற அன்பணைப்பில் முயலுவோமாக.

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே"

திருச்சிற்றம்பலம்.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

"ஆராய்ச்சி முறையைப் பற்றி நான் இதுகாறும் உனக்கு உபதேசித்தேன். ஈண்டுக் குறித்த பொருளைப் பற்றிய மாறுபட்ட, இரு கூறுகளில் உண்மையெது வென்றுணர வேண்டுமாயின், ஆராய்ச்சி வேண்டும். மறுக்க முடியாத உண்மைகளைப் (Indisputable facts) பற்றி ஆராய்ச்சி எழுவதில்லை. தலைமகன் உன்னை முதன் முதல் சந்தித்த நாள் தொட்டு இன்று வரை நிகழ்ந்தனவும், நான் கண்டறிந்தனவு மாகிய உண்மைகளை நீ மறுக்கவே முடியாது. அங்ஙனமாயின் ஆராய்ச்சி எற்றுக்கு? தலைவனைக் கூடி நீ பன்னெடுங்காலம் வாழ்வாயாக." என்று தோழி தலைவியை வாயார வாழ்த்தினள். 'மறுதாற் சரிய வாழி தோழி' என்ற கபிலர் வாய்மொழியிற் புதைந்து கிடக்கும் அரிய கருத்துக்களும், நுண்ணிய நகையும், (Subtle humour), அவற்றை நனித்தறிய வல்லார்க்கு இன்பம் பயக்கும்.

தலைமகளை 'நீயே ஆய்ந்துபார்' எனத் தூண்டிய தோழி, ஆராய்ச்சி முறையைத் தெளிவாகக் கூறியவள், ஈண்டுக் குறித்த பொருளைப் பற்றி ஆராய்ச்சியே வேண்டா மென்பதற் கேற்ற காரணமுங் காட்டினள். மேலும், தோழி, இடனறிந்து நட்பாராய்தலைப் பற்றி விளக்கப் புகுகின்றாள். "பெரியோர், தாம் நட்கக் கரு[illegible] தகவிலா என்பதை [illegible] அவருடன் நட்புக் கொள்வர். அறிந்தோ, அறியாமலோ, ஒருவரை நட்பாகக் கொண்ட பின், அவர் தகுதியைப் பற்றிப் பெரியோர் ஆராய்வதில்லை. ஆகவே தலைவனும் நீயும் களவொழுக்கத்தால் ஒன்றுபட்டபின், அவன் தகுதியைப் பற்றி நீ இனிச் சந்தேகித்து ஆராயப் புகுவது தகாது" என்று தோழி தலைவியை இடித்துரைத்தாள்.

'நட்பு' என்னும் அதிகாரத்தின் பின், திருவள்ளுவர் தாமியற்றிய திருக்குறளில், 'நட்பாராய்தல்' என்னுமோர் அதிகாரத்தை அமைத்தார். அப் பின்னதிகாரத்தில் வரும் முதல் குறட்பா.

"நாடாது நட்டலிற் கேடில்லை
நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு"

என்பதாகும்.

அக் குறட்பாவில் நட்டபின் ஆராய்ச்சி தேவையில்லை என்பதை வற்புறுத்தி, நட்புக் கொள்வதற்குமுன் ஆராயவேண்டுவன வற்றைப் பின் வரும் குறட்பாக்களில் திருவள்ளுவர் விளக்குகிறார். மேற்காட்டிய குறட்பாவின் கருத்தையே கபிலர், ஈண்டுக் குறித்த நற்றிணைச் செய்யுளில் பெரியோர் வழக்காக்கிப்,

"பெரியோர்நாடி நட்பினல்லது
நட்டு நாடார் தம் மொட்டியோர்
திறத்தே"

என்று பாடினர். இதனால் இரு பெரும் புலவர்தம் கருத்தொற்றுமை வெளியாகின்றது.

"குணனுங் குடிமையும் குற்றமும்
குன்றா வினனு மறிந்தியாக்க நட்பு"

என்னுங் குறட்பாவின் கருத்தையே 'அறிவறிந்து அளவல் வேண்டும்,' என்னுங் கபிலர் வாய்மொழி விளக்குகின்றதெனநாம்கொள்ளலாம்.

காண்டல், கருதல், உரை, என்பன அளவைக் கூறுகள். அவற்றை வட மொழியில் பிரத்தியட்சம், அனுமானம், ஆசமம் என்பர்! ஓர் [ஒப்பற்ற] வாய்ச்சொல்' என்றமையால் உரையையும், உரையால் துணிய முடியாத உண்மையை நேரில் கண்டும் பிறருடன் எண்ணியும், அறிதல் கூடும் என்பார் (நீயுங் கண்டு நுமரொடும் எண்ணி' என்றமையால் காண்டல், கருதல் அளவைகளையும் கபிலர் விளக்கினர். எனவே, ஆசிரியர் கபிலர் அளவை நூலில் [Logic] வல்லுநர் என்பதும் நாமறியக் கிடக்கின்றது.

அளவை இலக்கணங் கொண்டு பொருளை ஆராயுந்திறம் படைத்த கபிலரின் வாய்மொழிக்கு, மேல் தீட்டிய 'நற்றிணைச்' செய்யுள் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

சைதாப்பேட்டைத் திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழகத்தின்
ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவிற்கு (4, 5-8-51)

வாழ்த்துரை

உலகமுள் ளளவும் உயர்தனிப் பெருமை
உலப்பிலாப் பொருள்வளம் பலவும்
இலகுமெங் குறளால் இசைத்திடுங் கருத்தும்
எழிற்றிரு வெண்ணெயூ ரண்ணல்
நிலைபெற மொழிந்த நிமலவா சகமு
நேர்பெறச் சிறந்தமை யுணர்த்துங்
கலைபெறும் அறிஞர் களித்திடச் சைதை
கண்டவிச் சிவநெறிக் கழகம்.

புத்தர்மா வீரர் புகழ்நபி யேசு
புறமதத் தலைவர்க ளானோர்
கத்தமக் குரிய நிலையினின் மொழிந்த
தனிக்கருத் தெண்ணில வடக்கி
ஒத்தநற் பெருமைச் சிவநெறி யதன்
உணர்ந்திடில் உலகவர் உளத்தில்
புத்தமு தூறி மதச்செருப் புரியார்
புலஞ்செழித் துயருவர் புரிந்தே.

செந்தமிழ்ப் பணியுஞ் சிவநெறிப் பணியுஞ்
சிறக்குமெய்ம் மாபினிற் செழிக்க
ஐந்தெனும் ஆண்டின் அளவினிற் சைதை
ஆங்குறும் சிவநெறிக் கழகம்
முந்து மாம்பாக்கக் குருகுலக் கருத்தின்
மொய்ம்புடன் கிளர்ந்தெழீஇ மக்கள்
சிந்தையி னின்பஞ் செழித்திடப் பணிகள்
செய்தருள் கீர்த்தியில் திகழ்க.

வள்ளுவர் பெயரின் மலர்ந்தொளி சிறக்கு
மாண்புடைச் சிவநெறிக் கழகம்
கொள்ளுவ வாழ்வில் தள்ளுவ வாகும்
கொள்கைகள் வகையெலாங் குறித்தே
பள்ளமுற் றிழியும் புனலென மாந்தர்
பயின்றுளம் விரும்பியோர்ந் துயாத்
தள்ளரும் பணிகள் தாவறப் புரிக
தரைமிசை யோங்குக தழைத்தே.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. ச. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)